## உச்சநீதிமன்றத் தீர்ப்பையே தலைகீழாகப் புரட்டிப் போட்டு

# கூட்டாட்சித் தத்துவத்தின் ஆணிவேரையே தகர்த்தெறிவதா?

## டெல்லி நிர்வாகச் சீர்திருத்த மசோதா குறித்து மாநிலங்களவையில் திருச்சி சிவா கடும் கண்டனம்!

**புதுடெல்லி, ஆக. 10-**

**"உச்சநீதிமன்றத் தீர்ப்பையே தலைகீழாகப் புரட்டிப் போட்டு கூட்டாட்சித் தத்துவத்தின் ஆணி வேரையே தகர்த்தெறிவதா?" என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசும் போது கடும் கண்டனம் தெரிவித்தார்.**

மாநிலங்களவையில் டெல்லி நிர்வாகச் சீர்திருத்த சட்ட முன்வடிவு தொடர்பான விவா தத்தில் பங்கேற்று தி.மு.க. மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசியதாவது:-

இந்திய ஜனநாயகத்தின் ஆத்மாவாக விளங்கும் கூட்டாட்சித் தத்துவத்தின் கோட்பாட்டை அடியோடு சிதைக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த சட்டமுன் வடிவை நான் மிகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

இந்த சட்ட மசோதாவை நிறைவேற்று வதில் அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பது கூட்டாட்சி தத்துவத்தின் மீதான இன்னொரு தாக்குதலாகும். இது தேவையற்றது; ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல; ஜனநாயகத்திற்குப் புறம்பானது; நியாயமற்றது; கூட்டாட்சிக்கு முரணானது. சட்டத்திற்குப் புறம்பானது. இதை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன்?

தேவையற்றது அந்த மசோதா. டெல்லிக்கு சிறப்பு அந்தஸ்து 1991ல் தரப்பட்ட போது பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. மதன்லால் குரானா மற்றும் மறைந்த சாகிப் சிங் வர்மா ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தபோது, டெல்லிக்கு முழு அந்தஸ்து கேட்டிருந்தனர்.

பின்னர் 2003 ஆகஸ்டில், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முழு மாநில அந்தஸ்து டெல்லிக்கு வழங்கும் வகையில் மசோதா ஒன்றை அறிமுகம் செய்தது. அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது டெல்லிக்கு முழு மாநில அந்தஸ்து வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அப்படியானால், இந்த அவசர சட்டத்திற்கு அல்லது இந்த சட்ட முன்வடிவிற்கு அப்படி என்ன தேவை ஏற்பட்டுவிட்டது. 2015 ஆம் ஆண்டு ஆம் ஆத்மி கட்சி குறிப்பிடத்தக்க பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது.

உடனடியாக, ஒன்றிய அரசு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது. டெல்லி அரசின் சேவைகள் யாவும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரும் என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சட்டப் போராட்டம் தொடங்கி கடந்த 8 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

**டெல்லி அரசுக்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு!**

2018லும் 2023லும் உச்சநீதிமன்ற அரசியலமைப்பு அமர்வு டெல்லி அரசுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியது. டெல்லி அரசுக்கு எல்லா அதிகாரங்களும் இருப்பதாக அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

**மாநில அரசின் அதிகாரங்களை மீறும் வகையில் உள்ளது!**

இப்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்த சட்டமுன் வடிவு, உச்சநீதிமன்றத் தீர்ப்பை தலைகீழாகப் புரட்டிப் போடும் வகையில் உள்ளது மட்டுமின்றி மாநில அரசின் அதிகாரங்களை மீறும் வகையிலும் உள்ளது.

ஆட்சியில் இருந்தால் ஒரு நிலையும் இல்லாத போது ஒரு நிலையும் எடுக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்தால் ஆளுநர்களைக் கொண்டு தொல்லை தருகிறார்கள். யூனியன் பிரதேசமாக இருந்தால் அங்குள்ள துணை நிலை ஆளுநர்கள் எல்லா அதிகாரங்களையும் கையில் எடுத்துக்கொண்டு, மாநில அரசை செயல்பட விடாமல் செய்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் எங்கே இருக்கிறது ஜனநாயகம்.

நம்முடைய அரசியல் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மாநில அரசுகளுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மும்முனை சங்கிலியால் நமது அமைப்பு இணைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்கிறார்கள். அவர்கள் அரசை உருவாக்குகிறார்கள். அரசே அதிகாரிகளைக் கொண்டு இயக்குகிறது.

**இதனால் எந்தப் பயனும் விளையப்போவதில்லை!**

ஆனால் யூனியன் பிரதேசங்களிலோ, அதிகாரிகள், அரசின் கட்டுப்பாட்டில் இருக்க முடிவதில்லை. அப்படியாயின் இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ததன் மூலம் மும்முனை சங்கிலி முற்றிலுமாக இந்த அரசால் உடைத்தெறியப்பட்டுள்ளது. இதை நான் மட்டும் இங்கே கூறவில்லை. உச்சநீதிமன்றம் இதை கடுமையாக குறிப்பிட்டுள்ளது. இதனால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.

இந்த சட்ட மசோதாவை நான் ஏன் எதிர்க்கிறேன் எனக் குறிப்பிட விரும்புகிறேன். சிவில் சர்வீஸ் அதிகாரத்திற்கான தேசிய தலைமையை இந்த மசோதா வலியுறுத்துகிறது. அதன்படி முதலமைச்சர் தலைமையின் கீழ் 3 உறுப்பினர்களும், உள்துறை செயலாளர் மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட இரண்டு அதிகாரிகளும் இருப்பர்.

யார் அவர்கள்? ஒன்றிய அரசால் நியமிக்கக் கூடியவர்கள். அப்படியானால் என்ன நடக்கும் என்று அனைவரும் அறிவார்கள். இதில் இருவர் கோரம் (Quorum) என்றும் பெரும்பான்மையே முடிவெடுக்கும் என்று உள்ளது. நான் கூட இதற்கு திருத்தம் கொண்டு வந்தேன். அது நிறைவேறினால் கூட எடுபடாது. காரணம் அந்த பெரும்பான்மை அடிப்படையில் ஆலோசனை கூறினாலும் துணை நிலை ஆளுநர் அதை நிராகரித்து விட முடியும். அதனால் ரப்பர் ஸ்டாம்பை விட மோசமான நிலைக்கு முதலமைச்சர்கள் தள்ளப்படுவார்கள். இதைச் சொல்ல வருத்தப்படுகிறேன்.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல



மைச்சராகப் பொறுப்பேற்பவர்கள் வாக்காளர்களுக்கு உறுதிமொழி தந்தபடி செயல்பட வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செயல்பட முடியாதவாறு அரசின் கட்டுப்பாட்டில் இல்லாதவர்களாகி விடுகிறார்கள்.

மொகலாயர் முதற்கொண்டு ஆங்கிலேயர் வரை டெல்லி ஒரு அதிகார மையமாக செயல்பட்டு வந்தது. அவர்கள் எல்லாம் அதிகாரிகள் இல்லாமல்தான் செயல்பட்டார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? ஆனால் இந்த சட்ட முன்வடிவு அதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது. நாம் எதை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து இரண்டாவதாக அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அவர்கள் குறிப்புகளை தயாரிப்பார்கள். அது குறித்து விவாதிப்பார்கள். பின்னர் முடிவெடுப்பார்கள். அதன்பின் அம்முடிவை துணை நிலை ஆளுநருக்கும் அனுப்பி வைப்பார்கள்.

இதுகுறித்து சட்டத்துறை ஆய்வு மேற்கொள்ளும். ஆனால் இப்போது அமைச்சர்களுக்குப் பதில் அதிகாரிகளே முடிவெடுத்து ஆளுநருக்கு அனுப்பி வைப்பார்கள். ஆளுநர் அதை திருத்தலாம் அல்லது தள்ளுபடி செய்து விடலாம். ஆக முதலில் முதலமைச்சர்கள் ஒன்றுமில்லாதவர்களாக தேவையற்றவர்களாக இருக்கும் நிலையில் இப்போது அமைச்சரவையும் ஒன்றுமில்லாதவையாக தேவையற்றவையாக விடுகின்றது.

மூன்றாவது, ஏதாவதொரு அமைச்சர் ஒரு முடிவெடுத்தால், அதை நிறைவேற்றக் கூடியவர் செயலாளர் தான் என்கிற நிலை ஏற்படுகிறது. செயலாளர் அந்த முடிவை ஏற்காத பட்சத்தில், அந்த அமைச்சருக்குத் தெரியாமல் அதுபற்றி நேரடியாக தலைமைச் செயலாளரிடமோ துணை நிலை ஆளுநரிடமோ அந்த செயலாளர் தனது குறிப்பினை அனுப்பிடலாம். ஆக அமைச்சரும் தேவையற்றவராகி விடுகிறார்.

நான்காவதாக, டெல்லியும் மற்ற மாநிலங்களவைப் போல உள்ள மாநிலம்தான். அதிகார அமைப்புகள், கார்ப்பரேஷன்கள், கமிஷன்கள், இவைகளால் நடத்தப்படக்கூடியவை. இதன் தலைவர்களாக, உறுப்பினர்களாக இதுவரை மாநில அரசின் பரிந்துரைகளின் பெயரில் துணை நிலை ஆளுநர்தான் நியமித்து வந்தார்.

ஆனால் இனி அவர்களை துணை நிலை ஆளுநர்கள் அவர்களாக நியமித்து விடுவர். மாநில அரசுகளோ கை கட்டிக் கொண்டிருக்க வேண்டியதுதான். இப்படி ஒன்றன் பின் ஒன்றாக முதல்வரும், அமைச்சரவையும், அமைச்சரும் அதிகாரமில்லாதவர்களாகி விடுவார்கள்.

முன்பெல்லாம் அமைச்சரவை முடிவெடுத்து துணை நிலை ஆளுநருக்கு தெரியப்படுத்திய பின், அவர் சட்டமன்றத்தை கூட்டுவது குறித்து அறிவிப்பு வெளியிடுவார். இனி அப்படி அல்ல. ஆளுநர் அவராகவே சட்டமன்றத்தை கூட்டிவிடலாம். அவசரத் தேவை காரணமாக சட்டமன்றத்தை கூட்ட முதலமைச்சரோ அமைச்சர்களோ முடிவு செய்தாலும், அதற்கான

> **மொகலாயர் முதற்கொண்டு ஆங்கிலேயர் வரை டெல்லி ஒரு அதிகார மையமாக செயல்பட்டு வந்தது. அவர்கள் எல்லாம் அதிகாரிகள் இல்லாமல்தான் செயல்பட்டார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? ஆனால் இந்த சட்ட முன்வடிவு அதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது. நாம் எதை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறோம்.**

அதிகாரம் அவர்களுக்கு கிடையாது.

**சுக்குநூறாக சிதைந்து போகும்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது முக்கியக் கடமையாகும். ஆனால் இப்போது அது முடியாது என்கிற நிலை உள்ளது. எனவே தான் நாங்கள் மாநில சுயாட்சி கேட்கிறோம். எல்லா அதிகாரங்களும் ஒன்றிய அரசிடம் மையங்கொண்டால் என்ன நடக்கும்? சுக்கு நூறாக சிதைந்துதான் போகும்.

கூட்டாட்சிக்குப் பேர் போன இந்தியாவில், எல்லாமே அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளது. மதச்சார்பற்ற நிலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. இந்த சட்டமுன்வடிவு கூட்டாட்சியின் அடி வேரையே தகர்த்தெறிந்து விடும் என்று தான் நாங்கள் பயப்படுகிறோம்.

அண்ணல் அம்பேத்கரும் உச்சநீதிமன்றமும் தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாறாக அரசியல் சட்ட நெறிமுறைகளை அலட்சியம் செய்யும் வகையில் இந்த மசோதா உள்ளது.

அரசின் முடிவை ஆதரிக்கும் ஒரு சில கட்சிகளுக்கு நான் தெரிவிக்க விரும்புவது இதைத்தான். 100 குடிசைகள் உள்ள இடத்தில் 100வது குடிசை தீப்பற்றி எரிந்தால், முதல் குடிசையில் தூங்கிக் கொண்டிருந்தவன், உடனடியாக தூக்கத்தினின்று விழித்தெழுந்து அங்குமிங்கும் ஓடி தீயை அணைக்க முயற்சிப்பார். தீயணைப்புத் துறையை உடனே அழைப்பான் உதவி செய்வது மட்டுமல்ல; தன்னுடைய இல்லத்தையும் பாதுகாப்பதும் அவரது நோக்கமாகும்.

**ஜனநாயகம் இன்றைக்கு பெரும் ஆபத்தில் உள்ளது!**

இதுநாள் வரை நமது சுதந்திரத்தை பாதுகாத்து வந்துள்ளோம். ஜனநாயகத்தை பாதுகாத்து வந்துள்ளோம். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று நாம் அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

அத்தகைய ஜனநாயகம் இன்றைக்கு பெரும் ஆபத்தில் உள்ளது. மாநில அரசுகளுக்கு எதிராக ஏன் பல்வேறு குற்றச்சாட்டுகள்? சுயமாக எந்த மாநிலமும் செயல்பட முடியவில்லை. எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற முடியவில்லை. சட்டமன்றத்தில் ஏதாவதொரு சட்டத்தை நிறைவேற்றினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் தர மறுக்கிறார்.

அதனால் மக்களுக்கு முறையாக பணியாற்ற முடியவில்லை. (குறுக்கீடுகள்) மக்களின் தேவைகளை அவர்களால்தான் அறிந்துகொள்ள முடியும். எனவேதான் மாநில அரசுகள் ஏற்படுத்தப்படுகின்றன. மாநில அரசுகளின் அதிகாரங்களில் ஒன்றிய அரசு நேரடியாகத் தலையிடுகிறது அல்லது ஆளுநரிகள் மூலம் தலையிட முயற்சிக்கிறது.

**டெல்லிக்கு தன்னாட்சியை மீட்டெடுப்போம்!**

எங்களின் கருத்துக்கள் எல்லாம் ஒரு தலைப்பட்சமானதல்ல. எதற்காக மாநில அரசுகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. எதற்காக முதலமைச்சர்கள் எல்லாம் ரப்பர் ஸ்டாம்ப் என்கிற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், எல்லாவற்றையும் தேவையற்றதாகச் செய்துகிவிடுகிறீர்கள். அப்படி என்னதான் பெரியதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?

நான் ஏற்கனவே இதுபற்றி தெரிவித்துள்ளேன். ஜனநாயக நடைமுறையில், ஒருநாள், ஆட்சிக்கட்டிலில் இல்லாத அந்த கால கட்டத்தில், இதுபோன்று இயற்றப்பட்ட சட்டங்களுக்காக புலம்ப வேண்டி இருக்கும்; வருத்தப்பட வேண்டி இருக்கும். அது வெகு தூரத்தில் இல்லை.

2024 ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்திய தேசிய முன்னேற்றத்திற்கான கூட்டணி (I.N.D.I.A) வெல்லத்தான் போகிறது. அப்போது நாங்களும் ஆட்சிக்கு வந்து, டெல்லிக்கு தன்னாட்சியை மீட்டெடுப்போம்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

---

### புதுக்கோட்டை மாவட்டம் வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில்

## சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கூறினர்!

புதுக்கோட்டை ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி மற்றும் குமார் ஆகியோரை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 08.08.2023 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அதனைத்தொடர்ந்து, வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, திருமலை ஆகியோர்களின் வாரிசுதாரர்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் தஐ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களிடம் எஸ்.ரகுபதி ஆறுதல் கூறி, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அவர்களுக்கு உயர்தரத்திலான சிகிச்சையினை மேற்கொள்ளவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை. முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அரசு மருத்தவக்கல்லூரி முதல்வர் (பொ) மருத்துவர் ராஜ்மோகன், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஆசெந்தில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



சென்னை கிண்டி, காந்தி மண்டபத்தில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளை நேற்று முன்தினம் (08.08.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

---

### ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால் சாலிகிராமத்தில் கட்டப்பட்ட

## கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.10-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று முன்தினம் 08.08.2023), திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டார்ஸ் நிறுவனத்தால், கதவு எண். 24, அருணாச்சலம் சாலை, சாலிகிராமம் , சென்னை - 600 093 முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தற்போது ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வளாக கட்டிடம் 5 தொகுப்புகளுடன் கூடிய அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு 17.05.2011 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இக்கட்டிடத்திற்கு 20.10.2015 அன்று பணிநிறைவுச் சான்றிதழும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

தற்போது இவ்வளாகத்தில் குடியிருப்புகளை வாங்கியுள்ள குடியிருப்பு உரிமைதாரர்கள் மேற்படி இக்கட்டிடத்தினை திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டார்ஸ் நிறுவனம் சரியாக கட்டி தங்களுக்கு ஒப்படைக்கவில்லை என்ற கோரிக்கையின் பேரில் ஊடகத்தில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு செய்யப்பட்டது.

இக்கட்டிடத்தின் சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 12880 of 2022 நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் நீதிமன்றம் இக்கட்டிடத்தின் கட்டுமான நிறுவனரை சென்னை ஐ.ஐ.டி.யில் ரூபாய் இரண்டு கோடி செலுத்தி ஆய்வறிக்கையினை பெறுமாறு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து கட்டுமான நிறுவனர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு கடந்த 13.02.2023 அன்று இவ்வழக்கினை உயர்நீதிமன்றத்திலேயே தீர்த்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தது. ஆனால் கட்டிட மேம்பாட்டாளர் M/s. Jain Housing இதுநாள் வரை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளாகத்தின் குடியிருப்பில் வசிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி அமைச்சர் அவர்கள் M/s. CUBE நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடம் முழுவதுமாக தொழில்நுட்ப ஆய்வு செய்து இக்கட்டிடத்தின் தற்போதைய நிலைக்கான காரணம் மற்றும் கட்டிடத்தின் உறுதித்தன்மையின் தொழில்நுட்ப ஆய்வறிக்கையினை விரைவில் பெற்று மக்களின் நலனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கூடேரிப்பட்டு ஊராட்சி மன்றம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2000மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன்,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.